திரு. எம். சீரங்கன் : தலைவர் அவர்களே, வெங்கட்ட ராணி நீர்த்தேக்கத் திட்டத்தை அரசு பரிசீலனை செய்து, பிறகு நிறுத்தியதற்குக் காரணம், அங்கே சிலருடைய சுயநலம் காரணமாக வேறு வழியில் திருப்பி விடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் 300 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். 6 கி.மீ. அளவிற்கு அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளுடைய கிணறுகளுக்கு தண்ணீர் ஊற்று கிடைக்கும். எனவே, மீண்டும் அரசு இதை பரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, பரி சீலனை ஆரம்ப நிலையில் இருப்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையை கருத்தில் கொண்டு மீண்டும் அரசு அதை ஆராயும்.

சத்துணவுக் கூடங்களில் ஆயாக்களுக்கு சீருடை

*3357 திரு. யூ. கே. வெள்ளிங்கிரி :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்துணவுக் கூடங்களில் வேலை செய்யும் ஆயாக்களுக்கு சீருடை கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. யூ.கே. வெள்ளிங்கிரி : தலைவர் அவர்களே, அவர்கள் அந்த சத்துணவுக் கூடங்களில் பல காலமாக பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு சீருடை இனிமேலாவது வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; தலைவர் அவர்களே, இனிமேலும் சீருடை வழங்கும் திட்டம அரசின் பரி சீலனையில் இல்லை.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி ; மாண்புமிகு தலைவர் அவர் களே, சத்துணவுக் கூடங்கள் பல இடங்களில் பழுதுபட்டுள்ளன. (மணியடிக்கப்பெற்றது).

1990 மார்ச் 23]

திரு. குமரி அனந்தன் ; தலைவர் அவர்களே, ஆயாக்களுக்கு சீருடை வழங்கும் திட்டம் அரசிடம் இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முழு அளவில் சீருடை வழங்க முடிய வில்லை என்றாலும், உணவு தயாரிப்பு, பரிமாறல் போன்ற பணிகள் இருக்கிற காரணத்தால் 'ஆப்ரன்' என்று சொல்லப்படுகிற மேலுடையாவது அவர்களுக்கு அளிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; தலைவர் அவர்களே, அதுபற்றிய தேவை எதுவும் தற்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நெருப்பு பற்றிக் கொள்ளாமல் இருக்க கவசம் எதுவும் அணிய வேண்டிய தேவை இருக்குமா ? (சிரிப்பு).

ஈரோட்டில் தோல் பதனிடும் கூடம்

***3385 திரு. ஜி. ஜி. குருமூர்த்தி** ;

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகசுத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், ஈரோட்டில் அரசு தோல் வாரியம் மூலம் தோல் பதனிடும் கூடம் ஒன்று அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி ; தலைவர் அவர்களே, நமது மாநிலத்தின் மற்ற இடங்களில் வேறு ஏதாவது தோல் பதனிடும் கூடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; தலைவர் அவர்களே, தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின்கீழ் விண்ணமங்கலத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலை ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது முழு அளவில் செயல் படுவதற்குத் தேவையான ஆர்டர்கள் நமக்கு கிடைக்காத காரணத்தால், அந்த நிறுவனமே இப்பபோது நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் காரணத்தால் தான், மேற்கொண்டு இன்னொரு நிறுவனத்தை நிறுவுகிற யோசனை அரசிடம் பரிசீலனையில் இல்லை.